# DEPOSITION OF WITNESS

*( XXIII Code of Criminal Procedure)*

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, SIVAGANGAI.**

**Prosecution:**PW.3

**Deposition of witness for }**

**Defence:**

**Case No.** Sessions Case No.**SC- 9/2017**

| **Name** | பவித்ரா | **D/o.** | கிருஷ்ணமூர்த்தி |
|---|---|---|---|
| **Village** | நமணசமுத்திரம் | **Taluk** | புதுக்கோட்டை |
| **Religion** | இந்து | **Calling** | அ.சா.3 |
| **Date** | 10-11-2022 | **Age** | 19/2022 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X 1872 of the day 10.11.2022.**

**முதல் விசாரணை:**

நான் மேலேக் கண்ட முகவரியில் எனது தாயாருடன் வசித்து வருகிறேன். ஆஜர் 3வது எதிரியை மட்டும் தெரியும். 1, 2 எதிரிகளை தெரியாது. எனக்கு இரண்டு மூத்த சகோதரிகள். அவர்கள் பெயர் அன்புக்கரசி, அபிராமி ஆகும். சம்பவ சமயத்தில் அன்புக்கரசி புதுக்கோட்டை ராணி பள்ளியில் 11ம் வகுப்பு படித்து வந்தார். அபிராமி அதே பள்ளியில் 9ம் வகுப்பு படித்து வந்தார். நான் திரு இருதய பள்ளியில் 7ம் வகுப்பு படித்து வந்தேன். எனது தாயார் தந்தையும் மளிகை கடை நமணசமுத்திரத்தில் வைத்திருந்தார்கள். கடந்த 24.02.2015ம் தேதி இரவு எப்பொழுதும் போல் 07.00 மணிக்கு நான் சாப்பிட்டுவிட்டு தூங்கிவிட்டேன். மறுநாள் காலையில் சகோதரிகள் நாங்கள் மூவரும் எழுந்து பள்ளிக்கு சென்றுவிட்டோம். அம்மா கடையை திறந்துவிட்டார். சம்பவம் சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

பள்ளியில் பெரியப்பா வந்து என்னை அழைத்து வந்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது.

(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

எனது தாயாரும் தந்தையும் மளிகை கடையுடன் சேர்ந்து டீ கடையும் நடத்தி வந்தார்கள் என்று காவல் விசாரணையில் நான் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். எங்கள் கடைக்கு 1வது எதிரி வீரசோழன் என்பவர் கேஸ் சிலிண்டர் போடுவதற்கு அடிக்கடி வருவார் என நான் காவல் துறை விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. அவ்வாறு சிலிண்டர் சப்ளை செய்வதற்காக அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வரும் வீரசோழனுக்கும் எனது தாயாருக்கும் தகாத பழக்கம் ஏற்பட்டது என்றும் எனது தந்தையார் இல்லாத நேரங்களில் வீரசோழன் எங்கள் வீட்டில் தங்கும் பழக்கம் உள்ளது என்றும் நான் காவல் துறை விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. எனது மூத்த சகோதரி அன்புக்கரசியிடம் அலைபேசி உள்ளது என்றால் சரிதான். அந்த அலைபேசி மூலமாக எனது சகோதரி அன்புக்கரசி பல ஆண்களுடன் பழக்கம் ஏற்பட்டு போனில் பேசுவதும் கோயில் சினிமாக்கள் என ஊர் சுற்றுவதுமாக இருந்தார் என்றும் அந்த பழக்கத்தை எனது தந்தையார் கண்டித்து வந்தார் என்றும் நான் காவல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. எனது தாயார் மற்றும் எனது மூத்த சகோதரி அன்புக்கரசி ஆகியோரின் பழக்க வழக்கங்கள் சரியில்லாத காரணத்தால் எனது தாயாருக்கும் எனது தந்தைக்கும் அடிக்கடி சண்டை வரும் என்றும் இந்த விபரங்களை நான் காவல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 25.02.2015ம் தேதி இரவு 11.00 மணியளவில் நாங்கள் அனைவரும்

தூங்கிக் கொண்டிருந்த போது எனது தந்தை கிருஷ்ணமூர்த்தி திடீரென அம்மு, அபி, பவித்ரா என்னை யாரோ கொல்றாங்கமா எழுந்திருங்க போலீசுக்கு போன் பண்ணுங்க என்று சத்தம் போட உடனே நானும் அக்கா அபியும் திடீரென எழுந்து பார்த்த போது 1வது எதிரி வீரசோழன் என்பவரும் 2வது எதிரி ராஜா என்பவரும் எங்கள் வீட்டிற்குள் படுத்திருந்த எனது தந்தை கிருஷ்ணமூர்த்தியின் முகத்தில் தலையணையால் வீரசோழன் அமுக்க ராஜா காலைப் பிடித்துக் கொண்டிருந்தார் என்றும் அப்போது எனது அக்கா அபிராமி கதவை திறக்க முயற்சி செய்தது என்றும் நான் காவல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. அப்போது வீரசோழனும் ராஜாவும் சத்தம் போடாதீர்கள் என்றும் சத்தம் போட்டால் உங்களுக்கும் இதே நிலைமை தான் என்றும் மிரட்டினார்கள் என்றும் கதவிற்கு அந்த பக்கம் நின்று கொண்டிருந்த எனது தாயாரும் எனது மூத்த அக்கா அன்புக்கரசியும் அதே போல் மிரட்டினார்கள் என்றும் நான் காவல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. அந்த சமயத்தில் எனது அப்பா சத்தம் போட்டார் என்றும் வீரசோழன் இரும்பு ராடால் எனது தந்தையின் தலையில் அடித்ததில் சிறிது நேரத்தில் சத்தம் அடங்கிவிட்டது என்றும் நான் காவல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. வீரசோழனும் ராஜாவும் வெளியில் இருந்த எனது அக்கா அன்புக்கரசியையும் அம்மாவையும் உள்ளே வரச் சொன்னார்கள் என்றும் அவர்கள் உள்ளே வந்தவுடன் எதிரிகள் மூவரும் அங்கிருந்த பெஞ்சில் எனது அப்பாவை தூக்கி வைத்து என்னையும் அக்கா அபிராமியையும் மாடியில் இருக்கும்படி கூறிவிட்டு எதிரிகள் மூவரும் ரயில்வே தண்டவாளத்தில் என் அப்பாவை போடுவதற்காக தூக்கி சென்றுவிட்டார்கள் என்று நான் காவல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. சிறிது நேரம் கழித்து எதிரிகள் திரும்பி வந்தார்கள் என்றும் எனது அம்மாவும் எனது அக்கா

அன்புக்கரசியும் வீட்டில் படிந்திருந்த ரத்தக் கறைகளை ஒரு பக்கெட்டில் தண்ணீர் எடுத்து எலுமிச்சைப் பழம் மற்றும் வெள்ளைக் கலர் பொடியை கலந்து தரையை துடைத்து சுத்தம் செய்தார்கள் என்று நான் காவல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. அதன் பின்பு ரத்தக் கறை படிந்திருந்த எனது தந்தையின் ஆடைகள், தலையணை, பெட்சிட் ஆகியவற்றை ஒரு சாக்கு மூட்டையில் கட்டி எனது அம்மா வீரசோழனிடம் கொடுத்து நீங்கள் மதுரை செல்லும் வழியில் எரித்துவிடுங்கள் என்று சொன்னார் என்று நான் காவல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. அந்த துணி மூட்டையை வாங்கிக் கொண்ட வீரசோழன் எனது அப்பாவை அடித்த இரும்பு ராடையும் எடுத்துக் கொண்டு சுமார் அதிகாலை 03.30 மணியளவில் சென்றுவிட்டார்கள் என்றும் நாங்கள் யாரும் தூங்காமல் இருந்தோம் என்றும் நான் காவல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. காலை 06.00 மணியளவில் எனது தாயார் எப்போதும் போல் பள்ளிக்கு கிளம்புங்கள் என்றும் யாரிடமும் எதுவும் கூறக்கூடாது என்று மிரட்டியும் எங்களை பள்ளிக்கு அனுப்பினார் என்றும் நான் பள்ளிக்கு சென்றேன் என்றும் நான் காவல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. காலை 11.00 மணியளவில் எனது பெரியப்பா ஆறுமுகம் பள்ளிக்கு வந்து எனது தந்தை ரயில் தண்டவாளத்தில் அடிபட்டு இறந்துவிட்டார் என்று கூறி நமணசமுத்திரத்திற்கு அழைத்து வந்தார் என்றால் சரிதான். அந்த விபரத்தை நான் காவல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதன் பிறகு சத்திரப்பட்டியில் உள்ள எனது தாத்தா, பாட்டி, சித்தப்பா உறவினர்களுக்கு தகவல் சொல்லப்பட்டு அவர்கள் நமணசமுத்திரத்திற்கு வந்தார்கள் என்ற விபரத்தை நான் காவல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் தெரியவில்லை. ரயில்வே போலீசார் எங்கள் எல்லோரையும் விசாரிக்க எனது தாயார் மிரட்டிவிட்டதால் எனது தாயாரை தவிர

நாங்கள் யாரும் ரயில்வே போலீசாரிடம் எதுவும் பேசவில்லை என்று காவல் ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. சிறிது நாட்களில் எனது மூத்த அக்கா அன்புக்கரசி அலைபேசியில் அடிக்கடி பேசிக்கொண்டு வெளியில் செல்வதும் நேரம் கழித்து வருவதுமாக இருந்ததால் எனது அம்மா எனது அக்காவை திட்டி அவர்களுக்குள் அடிக்கடி சண்டை வந்தது என்று நான் காவல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. எனது அக்கா கோபித்துக் கொண்டு சத்திரப்பட்டியில் உள்ள தாத்தா, பாட்டி வீட்டிற்கு சென்றுவிட்டது என்ற விபரத்தை நான் காவல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். அதன் பின்னீடு 2, 3 நாட்கள் கழித்து எனது 2வது அக்கா அபிராமியும் சத்திரப்பட்டியில் உள்ள தாத்தா, பாட்டி வீட்டிற்கு சென்றுவிட்டது என்ற விபரத்தை நான் காவல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். நானும் எனது தாயாரும் மட்டும் தான் நமணசமுத்திரத்தில் இருந்தோம் என்ற விபரத்தை நான் காவல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். திருப்பத்தூரில் நீதிபதி முன்பாக நானும் எனது பாட்டி சிங்கம்மாள், எனது சகோதரி அபிராமி ஆகியோர் ரகசிய வாக்குமூலம் கொடுத்தோம். என்னை நீதிபதி தனி அறையில் தனியாக விசாரணை செய்தார். நான் நடந்த விபரங்களை கூறினேன் அவர்கள் அதை டைப் செய்து கொண்டார்கள். பின்னீடு நான் அதில் கையெழுத்து செய்து வந்தேன். நான் இந்த சம்பவத்தில் எனது தந்தையை 1, 2 எதிரிகள் எனது தாயாருடன் சேர்ந்து கொலை செய்யவில்லை என எதிரிகளை காப்பாற்றுவதற்காகவும் எனது தாயாருடன் நான் சேர்ந்து வசித்து வருவதால் என் தாயார் கூறியதுபடி பொய்யாகவும் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. 1, 2 எதிரிகள் எனது தாயார், அன்புக்கரசி தூண்டுதலின் பேரில் என் தந்தையாரை கொலை செய்ததை நான் நேரில் பார்த்தேன் என்றும் எதிரிகளை

காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

திருப்பத்தூர் நீதித்துறை நடுவர் முன்பாக நான் சாட்சியம் அளித்த குவிமுச 164ன் படியான வாக்குமூலம் நான் தன்னிச்சையாக கொடுத்தது அல்ல என்றும் போலீசார் ஜோடித்த வழக்கிற்கு ஏதுவாக வாக்குமூலங்கள் தயார் செய்துள்ளோம் என்றும் அந்த வாக்குமூலத்தின் படி கூறும்படி சொன்னதின் பேரில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான்.

2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

எனது தகப்பனார் இறந்த சமயத்தில் நாங்கள் மூன்று பேரும் படித்துக் கொண்டிருந்தோம் என்றால் சரிதான். 25.02.2015ம் தேதி எனது அப்பா அம்மா, சகோதரிகள் அனைவரும் கடையை அடைத்துவிட்டு வீட்டில் போய் படுத்துவிட்டோம். 26.02.2015ம் தேதி காலை வரை நான், எனது மூத்த சகோதரிகள், தாயார் அனைவரும் வீட்டில் படுத்திருந்தோம். 26.02.2015ம் தேதி நான், எனது மூத்த சகோதரிகள் பள்ளிக்கு சென்றுவிட்டோம். நாங்கள் பள்ளிக்கு சென்ற பிறகு எனது பெரியப்பா வந்து எனது தகப்பனார் ரயில் விபத்தில் இறந்துவிட்டார் என்ற விபரத்தை சொன்ன பிறகு தான் என் தகப்பனார் இறந்த விபரம் எனக்கு தெரியும். அதுபோல் என் மூத்த சகோதரிகளுக்கும் தகவல் சொல்லப்பட்டு அவர்கள் இருவரும் பள்ளியிலிருந்து வீட்டிற்கு வந்துவிட்டார்கள். எனது தகப்பனார் இறந்த பின்னீடு மூத்த சகோதரிகள் இரண்டு பேரும் நானும் எனது தாயாருடன் தான் வசித்து வந்தோம். என் தகப்பனார் இறந்த பிறகு 2, 3 நாட்கள் கழித்து நான் பள்ளிக்கு செல்லவில்லை தட்டச்சு பயிற்சி வகுப்பிற்கு மட்டும் சென்றேன். இரு மூத்த சகோதரிகளும் பள்ளிக்கு சென்றார்களா என்ற விபரம்

எனக்கு தெரியாது. எனது 2வது மூத்த சகோதரி அபிராமி பள்ளிக்கு பரிட்சை எழுத மட்டும் சென்றாரா என்ற விபரம் எனக்கு தெரியாது. எனது பெரியப்பா ஆறுமுகம் வீடு விராச்சிலையில் உள்ளது. என் தகப்பனார் இறந்த பிறகு என் தாயார் எங்களை கட்டுப்பாடின்றி சுதந்திரமாக வீட்டில் வைத்திருந்தார். அதேபோல் வெளியில் சென்று வர கட்டுப்பாடுகள் விதிக்கவில்லை.

3வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

எனது அப்பா அரசியல் பிரமுகர் இல்லை. அதேபோல் அரசியல் சம்பந்தப்பட்ட கூட்டத்திற்கு செல்லமாட்டார். என் அப்பா அரசியல் சம்பந்தப்பட்ட கறை வேட்டி கட்டமாட்டார் என்றால் சரிதான். என் தகப்பனாரின் தந்தை சிதம்பரம் மாதம் ஒரு முறை எங்கள் வீட்டில் புதையல் இருப்பதாக சொல்லி அதை எடுக்க பூஜை செய்வார் என்றால் சரிதான். என் அம்மா பெயரில் உள்ள சொத்துக்களை என் தகப்பனார் உயிடன் இருக்கும் போது என் தகப்பனார் பெயருக்கு மாற்றச் சொல்லி என் தந்தையும் என் தந்தையின் குடும்பத்தாரும் என் அம்மாவை வற்புறுத்தினார்கள் என்றால் சரிதான். என் தந்தை உடல்நிலை சரியில்லை என்று அடிக்கடி மருந்து மாத்திரை சாப்பிடுவார் என்றால் எனக்கு தெரியாது. நான் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் 164 வாக்குமூலத்தில் படித்து பார்க்காமல் தான் கையெழுத்து செய்தேன். எனது தாயார் நீதிமன்ற காவலுக்கு சென்றவுடன் நானும் என் சகோதரிகளும் என் தந்தை குடும்பத்தார்கள் வசம் தான் இருந்தோம். என் அம்மாவை ஜாமீனில் வெளியில் எடுத்தது என் தந்தையாரின் குடும்பத்தார்கள் தான். என் அம்மா ஜாமீனில் வெளியில் வந்த பிறகு எனது தந்தை குடும்பத்தாருடன் தான் ஒன்றாக தான் வசித்து வந்தோம். எனது தந்தையார் குடும்பத்தாருடன் வசித்து வந்த போது நீ ஜெயிலுக்கு போயிட்டு வந்துட்ட இப்போவது என் தாயார் பெயரில் உள்ள சொத்துக்களை எழுதிக் கொடுத்தால் வழக்கை

முடித்துக்கொள்வோம் என்று சொன்னார்கள் என்றால் சரிதான். திருப்பத்தூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சொன்ன 164 வாக்குமூலம் போலீசார் சொன்னதின் பேரில் தான் சொன்னேன் என்றால் சரிதான்.

**ஒப்பம் ஆர்.சத்யதாரா, 10.11.2022**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**சிவகங்கை.**

**//உண்மை நகல்//**

# DEPOSITION OF WITNESS

*( XXIII Code of Criminal Procedure)*

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, SIVAGANGAI.**

**Deposition of witness for }** **Prosecution:**PW.4

**Defence:**

**Case No.** Sessions Case No.**SC- 9/2017**

| | | | |
|---|---|---|---|
| **Name** | செந்தில்குமார் | **S/o.** | சிதம்பரம் |
| **Village** | சத்திரப்பட்டி | **Taluk** | ஒரத்தநாடு |
| **Religion** | இந்து | **Calling** | அ.சா.4 |
| **Date** | 10-11-2022 | **Age** | 43/2022 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X 1872 of the day 10.11.2022.**

**முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் எனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் குடியிருந்து வருகிறேன். எனது தாயார் பெயர் சிங்கம்மாள், தகப்பனார் சிதம்பரம். விவசாய தொழில் செய்து வந்தார்கள். ஆஜர் 3வது எதிரியை மட்டும் தெரியும். என்னுடன் பிறந்தவர்கள் என்னைச் சேர்த்து 4 ஆண்கள் மற்றும் 3 பெண்கள் ஆவார்கள். எனது அண்ணன் கிருஷ்ணமூர்த்தி என்பவரை நமணசமுத்திரத்தில் சேது மகள் 3வது மகள் வசந்தி என்பவருடுன் திருமணம் செய்து வைத்தோம். சேது எங்கள் உறவினர் அல்ல. எனது சகோதரர் கிருஷ்ணமூர்த்திக்கு 3 பெண் குழந்தைகள். அன்புக்கரசி, அபிராமி, பவித்ரா ஆகியவை அவர்கள் பெயர்கள் ஆகும். 26.02.2015 அன்று காலை 09.00 மணியளவில் எனது தாயாருக்கு புதுக்கோட்டையிலிருந்து எனது மாமா மாணிக்கம் என்பவர் போனில் பேசினார். ரயில்வே ட்ராக்கில் கிருஷ்ண மூர்த்தி இறந்து கிடப்பதாக தகவல் சொன்னார். நான், எனது தாய் தந்தையர், எனது

தம்பி ராஜா, எனது அக்கா ராஜேஸ்வரி, அக்கா விஜயா, அக்கா முத்துலெட்சுமி ஆகியோர் கிளம்பி நமணசமுத்திரம் வந்தோம். அங்கு ரயில்வே ட்ராக்கில் கிருஷ்ண மூர்த்தி பிரேதம் இருந்தது. காரைக்குடி போலீசார் வந்து கிருஷ்ணமூர்த்தி பிரேதத்தை திருமயம் எடுத்து சென்றார்கள். அங்கிருந்து கிருஷ்ணமூர்த்தியின் பிரேதத்தை மருத்துவமனையிலிருந்து பெற்று சத்திரப்பட்டி கொண்டு சென்றோம். அங்கு நல்லடக்கம் செய்தோம். அதன் பின்னீடு 12.05.2015 அன்று மாலை 05.00 மணியளவில் ஊரணிபுரத்தில் தான் நிற்பதாகவும் வந்து தன்னை வீட்டிற்கு அழைத்து செல்ல சொல்லி அன்புக்கரசி எனக்கு போன் செய்தது. நான் போய் அழைத்து வந்தேன். அன்புக்கரசி எனது அண்ணன் கிருஷ்ணமூர்த்தியை தனது தாயார் தான் கொலை செய்தார் என்றும் அவர் விபத்தில் இறக்கவில்லை என்றும் கூறியது. அதன் பின்பு 3 நாட்கள் கழித்து எனது அண்ணனின் 2வது மகள் அபிராமியும் ஊருக்கு வந்தது. அம்மாவுடன் சேர்ந்து வீரசோழன், ராஜா ஆகியோர்கள் அப்பாவை கொலை செய்துவிட்டார்கள் என அபிராமி சொன்னது. நான் எனது தாயார், அன்புக்கரசி, என் தம்பி ராஜா, மாணிக்கம் ஆகியோர் திருச்சி ரயில்வே காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றோம். அங்கு எனது தாயார் புகார் கொடுத்தார். அதன் பின்னீடு வசந்தியை கைது செய்தார்கள். என்னை காவல் துறை விசாரிக்க நான் நடந்த விபரங்களை கூறினேன்.

1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

எனது அண்ணன் கிருஷ்ணமூர்த்தி அவ்வபோது குடும்பத்துடன் வந்து எங்களை பார்த்து செல்வார் என்றால் சரிதான். அதேபோல் நாங்களும் நமணசமுத்திரத்திற்கு சென்று அண்ணன் குடும்பத்தை பார்த்து வருவோம் என்றால் சரிதான். 26.02.2015ம் தேதி காலை 09.00 மணிக்கு எனது அண்ணன் கிருஷ்ண மூர்த்தி ரயிலில் அடிபட்டு இறந்துவிட்டதாக எனது மாமா போன் செய்தார் என்றால்

சரிதான். நாங்கள் அனைவரும் நமணசமுத்திரம் வரும்போது மணி சுமாராக பகல் 12.00 மணியிருக்கும். அதன் பின்னர் நாங்கள் சென்று பார்க்கும் போது ரயில் தண்டவாளத்தில் கிருஷ்ணமூர்த்தியின் உடல் இருந்தது என்றால் சரிதான். அதன் பின்னர் காரைக்குடி ரயில்வே போலீசார் வந்து பிரேத பரிசோதனைக்காக திருமயம் அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள். பிரேத பரிசோதனை முடிந்த பிறகு எனது அண்ணன் மனைவி வசந்தி நமணசமுத்திரத்தில் நல்லடக்கம் செய்கிறோம் என்று கூறினார். நாங்கள் அண்ணன் பிரேதத்தை சொந்த ஊருக்கு எடுத்து சென்று அடக்கம் செய்கிறோம் என்று அவரிடம் சொல்லி எடுத்து சென்றோம். நாங்கள் திருச்சி ரயில்வே உயர் அதிகாரியை பார்க்கும் போது மணி பகல் 01.00 மணியிருக்கும். அங்கிருந்த போலீசார் நாங்கள் திருச்சி சென்ற புகார் கொடுத்தும் உடன் சென்ற அனைவரிடமும் திருச்சி ரயில்வே போலீசார் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அவ்வாறு போலீசார் விசாரணை செய்தபோது எனது அண்ணன் மகள் அன்புக்கரசியின் செல்போன் நம்பரையோ, என்னுடைய செல்போன் நம்பரையோ கேட்டார்களா என்றால் இல்லை. அதன் பின்னீடு இந்த வழக்கு சம்பந்தமாக என்னை போலீசார் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் என் அண்ணன் மகள் அன்புக்கரசி எங்கள் வீட்டிற்கு வந்த பிறகு என் அண்ணன் இறந்தது குறித்து எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதன் பின்னர் 3 நாட்கள் கழித்து என் அண்ணன் மகள் அபிராமி எங்கள் வீட்டிற்கு வந்த பிறகு அம்மாவுடன் சேர்ந்து வீரசோழன் என்பவருடன் சேர்ந்து அப்பாவை கொலை செய்துவிட்டதாக எங்களிடம் கூறவில்லை என்றால் சரியல்ல. என் அண்ணன் இறந்தது சம்பந்தமாக போலீசார் எதிரிகளுக்கு எதிராக வழக்கு ஜோடித்துள்ளார்கள் என்றும் அவர்கள் சொல்லிக் கொடுத்ததின் பேரில் எனது அண்ணன் கிருஷ்ணமூர்த்தி கொலை

செய்யப்பட்டு இறந்து போனார் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அண்ணன் கிருஷ்ணமூர்த்தி ரயிலில் அடிபட்டு இறந்துவிட்டார் என்பது எனக்கு தெரியும் என்றும் இந்த வழக்கிற்காக அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி ஆண்களில் எங்களுக்கு மூத்தவராவார். எனது அண்ணன் வீட்டோடு மாப்பிள்ளயைாக தான் நமணசமுத்திரத்தில் வசித்து வந்தார். 3வது எதிரி வசந்தி போதுமான வசதிகளோடு தனது கணவர் மற்றும் பிள்ளைகளோடு வசித்து வந்தார். எனது அண்ணன் 3வது எதிரியோடு வசித்து வந்த 18 வருட காலங்களில் எங்கள் வீட்டிற்கு உதவி என்று கேட்டு வரவில்லை. என் அண்ணன் திருமணமாகி இறக்கும் வரையில் கணவன் மனைவிக்குள் எந்த பிரச்சினை சம்பந்தமாக காவல் நிலையத்திற்கு சென்றாரா என்றால் இல்லை. என் அண்ணனிடம் செல்போன் உள்ளது. எங்கள் வீட்டில் எனது அம்மா, தம்பி ராஜா, என்னிடமும் செல்போன் உள்ளது. போன் மூலமாக என் அண்ணன், 3வது எதிரி அவரது பிள்ளைகள் போன் மூலமாக எங்களிடம் பேசியுள்ளார்கள். எங்கள் வீட்டிற்கு இறந்து போன கிருஷ்ணமூர்த்தி அவரது குடும்பத்துடன் வருவார்கள். பிள்ளைகள் தனியாக வந்ததில்லை. எனது அண்ணன் இறந்த பிறகு பிள்ளைகள் தனியாக வந்தார்களா என்றால் ஆமாம். நமணசமுத்திரத்திற்கும் சத்திரப்பட்டிக்கும் இடையே 53 கி.மீ தூரம் இருக்கும். என் அண்ணன் இறந்த ரயில் ட்ராக்கிற்கு நாங்கள் சென்ற பிறகு தான் போலீசார் வந்தார்கள். நாங்கள் போகும் போது அங்கு 30 - 40 நபர்கள் அங்கிருந்தார்கள். நாங்கள் பிரேதம் கிடந்த இடத்திற்கு சென்ற பிறகு 45 நிமிடங்கள் கழித்து தான் போலீசார் அங்கு வந்தார்கள். நானும் எனது குடும்பத்தை சேர்ந்தவர்களும் அங்கு சென்ற பிறகு

எனது அண்ணன் கிருஷ்ணமூர்த்தியின் பிள்ளைகளுடன் பேசவில்லை. ரயில்வே ட்ராக்கிலிருந்து கிருஷ்ணமூர்த்தியின் பிரேதத்தை சுமார் 01.00 - 01.30 மணியளவில் திருமயம் அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள். சடலக் கூறாய்வு முடிந்து சுமார் 05.30 மணியளவில் எனது அண்ணனின் உடலை ஒப்படைத்தார்கள். அப்போது அங்கு போலீசார் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். நாங்கள் திருமயம் மருத்துவமனையிலிருந்து மாலை 06.30 மணி போல் கிளம்பினோம். நாங்கள் கிளம்பும் மாலை 06.30 மணி வரை விபத்து சம்பந்தமாக கிருஷ்ணமூர்த்தி பிள்ளைகளிடமோ வேறு யாரிடமும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். கிருஷ்ணமூர்த்தியின் இறப்பிற்கு முன்பு வரை கிருஷ்ணமூர்த்தி மனைவி மற்றும் பிள்ளைகளுடன் நல்ல முறையில் பேசிக்கொள்வோம். கிருஷ்ண மூர்த்தியின் இறுதி சடங்கிற்கு அவரது பிள்ளைகளை நாங்கள் கூப்பிடவில்லை. எனது அண்ணன் இறந்த 3 மாத காலத்தில் அவரது பிள்ளைகள் அவரது தாயார் 3வது எதிரியின் பாதுகாப்பில் தான் இருந்து வந்தார் என்றால் சரிதான். எனது அண்ணனின் மூத்த பெண் அன்புக்கரசி என்னுடன் தனிப்பட்ட முறையில் போனில் பேசியது இல்லை. நானும் என் குடும்பத்தை சேர்ந்தவர்களும் என் அண்ணன் இறந்த பிறகு 3வது எதிரி மற்றும் என் அண்ணனின் பிள்ளைகளை நேரில் சென்று பார்க்கவில்லை என்றால் சரிதான். மூத்த பெண்ணனின் அன்புக்கரசியின் செல்போனின் எண் எனக்கு தெரியாது. அதுபோல் எனது செல்போனின் எண் அன்புக்கரசிக்கு தெரியாது. அன்புக்கரசி எனது அண்ணன் கிருஷ்ணமூர்த்தியை தனது தாயார் தான் கொலை செய்தார் என்றும் அவர் விபத்தில் இறக்கவில்லை என்று சொன்னது போல் எனது தாயாருடன் சேர்ந்து நான் உடந்தையாக இருந்தேன் என்று எங்களிடம் சொல்லவில்லை. கிருஷ்ணமூர்த்தியின் மூத்த மகள் அன்புக்கரசியை எனது மைத்துனர் பாண்டி என்பவருக்கு திருமணம் செய்து

எங்களுடன் வசித்து வருகிறார். கிருஷ்ணமூர்த்தியின் மூத்த மகள் அன்புக்கரசி தனது தாயார் தான் மற்ற எதிரிகளுடன் சேர்ந்து கொலை செய்தார் என்ற விபரத்தை சொல்லவில்லை என்றும் 3வது எதிரிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற திட்டத்துடன் பொய்யாக என் தாயார் புகார் அளித்து அதற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனது சகோதரர் உண்மையில் ரயில் விபத்தில் தான் இறந்தார் என்றும் இந்த வழக்கிற்கும் 2வது எதிரிக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்று சொன்னால் சரியல்ல.

3வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

இந்த வழக்கு சம்பந்தமாக எனது தாயாரும் எனது மாமா மாணிக்கம் என்பவரும் தான் புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். புகாரில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது அப்பா என் அண்ணன் கிருஷ்ணமூர்த்தி வீட்டிற்கு மாதமாதம் சென்று வருவார் என்றால் சரிதான். எனது அண்ணன் மனைவி 3வது எதிரிக்கும் அவரது சகோதரிக்கும் சொத்துக்களை பாகப்பிரிவினை செய்ததில் 3வது எதிரிக்கு கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பில் சொத்துக்கள் இருந்தது என்றால் சரிதான். 3வது எதிரியை எனது தாய்மாமன் மாணிக்கம் என்பவர் தான் பெயில் எடுத்தார் என்றால் சரிதான். 3வது எதிரி வசந்திக்கு எனது அக்கா கணவர் இருவரும் தான் ஜாமீன் கொடுத்தார்கள் என்றால் சரிதான். ஜாமீனில் வெளிவந்த பிறகு 3வது எதிரி வசந்தி எனது அக்கா கணவர் மச்சான் மனோகரன் வீட்டில் வசித்து வந்தார். எனது உடன் பிறந்த இளைய சகோதரர் ராஜாவிற்கு 2015ல் 37 வயதிருக்கும் என்றால் சரிதான். அவர் வெல்டிங் கடை வைத்துள்ளார் என்றால் சரிதான். ஜாமீனில் வெளி வந்த 3வது எதிரி வசந்தியை என் உடன் பிறந்த இளைய சகோதரர் ராஜா என்பவர் அவரது பாதுகாப்பில் சிறிது காலம் வைத்திருந்தார் என்றால் சரியல்ல. எனது அண்ணன்

மகள்கள் அன்புக்கரசியும், அபிராமியும் நேரடியாக எங்கள் ஊருக்கு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் எனது சகோதரர் கிருஷ்ணமூர்த்தி இருந்த காலத்திலும் இறந்த பின்னீடும் எனது குடும்பத்தார் சொத்துக்கள் எழுதி வைக்க சொல்லி வற்புறுத்தினோம் என்றும் அவர் மறுத்ததால் எனது தாயார் அளித்த புகாரிற்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**ஒப்பம் ஆர்.சத்யதாரா, 10.11.2022**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**சிவகங்கை.**

**//உண்மை நகல்//**